இந்தியாவின் 78வது சுதந்திர தினம்: உலகத் தலைவர்கள் வாழ்த்து

புதுடெல்லி, ஆக.16

இந்தியாவின் 78வது சுதந்திர தினம் நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி உலக தலைவர்கள் பலரும் இந்தியாவுக்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர்.

ரஷிய அதிபர் புதின்:

இந்தியாவின் 78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். 77 ஆண்டுகளுக்கும் மேலாக சுதந்திரமான வளர்ச்சியில், உங்கள் நாடு சமூகபொருளாதார, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பல துறைகளில் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிகளைப் பெற்றுள்ளது. இந்தியாவுடனான உறவுகளை நாங்கள் மதிக்கிறோம். இருநாடுகளுக்கு இடையில் சமீபத்தில் கையெழுத்தான ஒப்பந்தங்களை செயல்படுத்துவது பன்முகத்தன்மை கொண்ட ரஷியஇந்திய ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு பங்களிக்கும் என்று நான் நம்புகிறேன்.

பிரான்ஸ் அதிபர் மேக்ரான்:

78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய மக்களுக்கு எனது வாழ்த்துகள். கடந்த ஜனவரி மாதம் நான் இந்தியாவுக்கு வந்த போது நீங்கள் அளித்த அன்பான வரவேற்பை நினைவுகூர்கிறேன். இருநாடுகளின் உறவை வலுப்படுத்துவதில் நாம் நிர்ணயித்த லட்சிய இலக்குகளை அடைய எனது நண்பர் நரேந்திர மோடியுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்.

மொரீஷியஸ் பிரதமர்:

78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடிக்கும் இந்திய மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். துடிப்பான மற்றும் எப்போதும் செழிக்கும் மொரிஷியஸ் இந்திய உறவு வாழ்க.

மாலத்தீவு அதிபர்:

சுதந்திர தினத்தை கொண்டாடும் ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி மற்றும் இந்திய மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றில் வேரூன்றிய நமது நீடித்த நட்பு மற்றும் நம்முடைய கூட்டாண்மை தொடர்ந்து வலுப்பெறும், பரஸ்பர செழிப்பு மற்றும் பகிரப்பட்ட இலக்குகளை அடையும் என்று நான் நம்புகிறேன்.

நேபாள பிரதமர் கே.பி. சர்மா ஒலி:

78வது சுதந்திர தினத்தில் பிரதமர் மோடி மற்றும் இந்திய மக்களுக்கு அன்பான வாழ்த்துக்கள். இந்த நாள் நமது நாடுகளுக்கு இடையே நட்பு மற்றும் ஒத்துழைப்பின் பிணைப்பை வலுப்படுத்தட்டும். நேபாளம்இந்திய உறவுகளை மேம்படுத்த ஆவலுடன் காத்திருக்கிறோம்.

பூடான் பிரதமர் ஷேரிங் டோப்கே:

இந்திய அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியான சுதந்திர தின வாழ்த்துக்கள். பூடான் இந்தியா இடையேயான சிறப்பு நட்பு எப்போதும் வலுவாக வளரட்டும்.

உலக தலைவர்களுக்கு மோடி நன்றி

இது தவிர, பல்வேறு நாடுகளின் வெளியுறவுத் துறை மந்திரிகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சகங்களில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்தன.

இதனிடையே சுதந்திர தினத்தையொட்டி சமூக வலைத்தளம் மூலம் வாழ்த்து தெரிவித்த உலக தலைவர்கள் அனைவருக்கும் பிரதமர் மோடி தனித்தனியே நன்றி தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு

கவர்னர் அளித்த தேநீர் விருந்தில் பங்கேற்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 16–

கவர்னர் ஆர்.என்.ரவி அளித்த தேநீர் விருந்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்.

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி, 78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கவர்னர் மாளிகையில் முதல்அமைச்சர், அமைச்சர்கள், அரசியல் கட்சியினர், தொழில் அதிபர்கள், சிறுதொழில் முனைவோர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு நேற்று மாலை தேனீர் விருந்து அளித்தார். அதில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்.

அதற்காக அவர் நேற்று மாலை கவர்னர் மாளிகை வந்தார். அப்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கைகளை பற்றி, கவர்னர் ஆர்.என்.ரவி வரவேற்றார்.

இதையடுத்து கவர்னர் ஆர். என்.ரவிக்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பொன்னாடை அணிவித்து, ஆங்கிலேயேருக்கு எதிராக போராடிய வ உ சிதம்பரனாரின் வரலாற்றை பறைச்சாற்றும் 'சுதேசி நீராவி" என்ற புத்தகத்தை பரிசாக வழங்கினார்.

அதன்பின் கவர்னர் ஆர்.என். ரவி மற்றும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் சுதந்திரதின பொன் விழா அரங்கத்திற்கு வந்தனர். தேசிய கீதம் மற்றும் தமிழ்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. கலைநிகழ்ச்சிகளை கவர்னரும், முதல்அமைச்சரும் ரசித்து பார்த்தனர்.

பின்னர் கவர்னர் ஆர்.என். ரவி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தேநீர் விருந்து அளித்தார். அப்போது இருவரும் சிறிது பேசி கொண்டு இருந்தனர். அதன்பின் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

நிகழ்ச்சியில் ஐகோர்ட்டு பொறுப்பு தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார், சபாநாயகர் அப்பாவு, துணை சபாநாயகர் பிச்சாண்டி, அமைச்சர்கள் துரைமுருகன், நேரு, ஐ.பெரியசாமி, பொன்முடி, எ.வ.வேலு, எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின், தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா உள்பட பலர் கலந்து கொண்டனர்

அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், பெஞ்சமின், முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், தமிழக பா ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை, பாட்டாளி மக்கள் கட்சி ஜி.கே.மணி, தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா, த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கவர்னர் ரவி, அவருடைய மனைவி லட்சுமி ரவி ஆகியோர், விருந்தினர்கள் ஒவ்வொருவரையும் அவர்களது இடத்துக்கே சென்று வரவேற்றனர்.

கவர்னரின் தேநீர் விருந்தை தி மு க மற்றும் அதன் கூட்டணி கட்சிகளும் புறக்கணிப்பதாக அறிவித்து இருந்தனர். ஆனால் அரசு சார்பில் முதல்அமைச்சரும், அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

''பயிற்சி டாக்டர்களுக்கு வாரத்துக்கு 74 மணி நேரத்துக்கு மேல் பணி வழங்கக்கூடாது''

தேசிய மருத்துவ கமிஷன் பணிக்குழு பரிந்துரை

புதுடெல்லி, ஆக.16–

பயிற்சி டாக்டர்களுக்கு வாரத்துக்கு 74 மணி நேரத்துக்கு மேல் பணி வழங்கக்கூடாது என்றும், வாரம் ஒருநாள் விடுமுறை கட்டாயம் வழங்க வேண்டும் எனவும் தேசிய மருத்துவக்கமிஷன் பணிக்குழு பரிந்துரைத்து இருக்கிறது.

பயிற்சி டாக்டர்களின் பணிச்சூழல், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்ய தேசிய மருத்துவ கமிஷன், பணிக்குழு ஒன்றை அமைத்து இருந்தது.

'மருத்துவ மாணவர்களுக்கான மனநலம் மற்றும் நல்வாழ்வுக்கான பணிக்குழு' என்ற அந்த குழுவினர் தங்கள் அறிக்கையை சமர்ப்பித்து உள்ளனர். இதில் பல்வேறு அம்சங்களை சுட்டிக்காட்டி பரிந்துரைகள் வழங்கப்பட்டு உள்ளன.

அதில் முக்கியமாக, பயிற்சி டாக்டர்களுக்கு வாரத்தில் 74 மணி நேரத்துக்கு மேல் பணி வழங்கக்கூடாது எனவும், வாரத்துக்கு ஒருநாள் கட்டாயம் விடுமுறை அளிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

பணிச்சுமை அதிகமாக இருந்தால், மருத்துவமனை அல்லது மருத்துவக்கல்லூரிகள் கூடுதல் மருத்துவ அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

இந்த முதுநிலை மருத்துவ மாணவர்களின் உடல் மற்றும் நல நலனுக்காக தினமும் 7 முதல் 8 மணி நேர தூக்கம் உறுதி செய்யப்பட வேண்டும். விடுப்பு கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட வேண்டும். காரணமின்றி விடுப்பு மறுத்தல் கூடாது.

ராகிங் பிரச்சினைகளை கட்டுப்படுத்த தேசிய மருத்துவ கமிஷனின் வழிமுறைகளை தீவிரமாக அமல்படுத்த வேண்டும். மருத்துவக்கல்லூரிகளில் ராகிங் தடுப்பு பிரிவுகள் நிச்சயம் இருக்க வேண்டும். இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு சுழற்சி முறையில் ஆண்டுக்கு ஒருமுறையாவது 10 நாள் விடுமுறை அளிப்பது குறித்து மருத்துவக்கல்லூரிகள் பரிசீலிக்கலாம். இதன் மூலம் தங்கள் குடும்பத்துடன் அவர்களது பிணைப்பை அதிகரிக்கும்.

பணியிடங்களில் பயிற்சி டாக்டர்களுக்கு வசதியான ஓய்வு அறைகள், சத்தான உணவுகள், நீர்ச்சத்து வசதிகள் இருக்க வேண்டும். அவர் களுக்கு மருத்துவமனைகள் வழக்கமான இடைவேளை களை வழங்க வேண்டும்

விரிவுரைகள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் மனநலக் கல்வியை இளங்கலை மற்றும் முதுகலை பாடத்திட்டங்களில் சேர்க்க வேண்டும்.

மருத்துவ ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நிர்வாகம் ஆகியோர் நேரடி அமர்வுகள் அல்லது ஆன்லைன் மூலம் அவ்வப்போது மனநலம் குறித்த வழக்கமான பயிற்சியைப் பெற வேண்டும்.

மேற்கண்ட பரிந்துரைகள் அந்த பணிக்குழுவின் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டு உள்ளன.

சுதந்திர தினம்: விடுமுறை அளிக்காத 333 கடைகள், ஓட்டல்களுக்கு அபராதம்

சென்னை, ஆக. 16

சுதந்திர தினத்தையொட்டி விடுமுறை அளிக்காத 333 கடைகள், ஓட்டல்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

சென்னை 3வது வட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) சிவக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தொழிலாளர் ஆணையர் அதுல் ஆனந்த், கூடுதல் ஆணையர் யாஸ்மின் பேகம் ஆகியோரின் அறிவுறுத்தல்படி சென்னை முதலாவது வட்ட தொழிலாளர் இணை ஆணையர் விமலநாதன் உத்தரவின் பேரில் முதலாவது, 2வது, 3வது வட்ட தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) தலைமையில் தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் சென்னை மாவட்டத்தில் உள்ள கடைகள், நிறுவனங்களுக்கு சுதந்திர தினத்தையொட்டி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதா? என ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது 176 கடைகள் மற்றும் நிறுவனங்கள், 196 உணவு நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்காதது கண்டறியப்பட்டது.

இதைத்தொடர்ந்து 333 கடைகள், நிறுவனங்கள், ஓட்டல்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் எம்.எல்.ஏ. ரமேஷ் மரணம்: எடப்பாடி இரங்கல்

சென்னை, ஆக.16–

திருப்பத்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஜி.ரமேஷ் காலமானார். இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், திருப்பத்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஜி.ரமேஷ் மாரடைப்பால் மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மனவேதனையும் அடைந்தேன்.

கழகத்தின் தீவிர விசுவாசி அன்புச் சகோதரர் ரமேஷை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், இந்தத் துயரத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியையும், தைரியத்தையும் அளிக்க வேண்டும் என்றும், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று கூறியுள்ளார்.

க்ரோஆர்க் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்

(முன்னர் டெலிசிஸ் இன்போ – இன்ப்ரா (இந்தியா) லிமிடெட்

புதிய எண்.1/L, பிளாக்கர்ஸ் சாலை, 2-F, கெயிட்டி பாலஸ், 2வது தளம், சிந்தாதரிப்பேட்டை, சென்னை – 600 002

CIN NO.:-L70200TN1992PLC023621, E-Mail id:-telesys 1992@yahoo.com, website:-www.telesys.in

30 ஜூன், 2024ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.06.2024	முடிந்த காலாண்டு 31.03.2024	முடிந்த காலாண்டு 31.03.2024	முடிந்த காலாண்டு 30.06.2023
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	3,154.57	116.62	4,067.12	495.96
வரிக்கு முன் சாதாரண செயல்பாடுகள் மூலம் நிகர லாபம்/(நஷ்டம்)	127.54	-72.24	30.51	0.96
வரிக்கு பின் சாதாரண செயல்பாடுகள் மூலம் நிகர லாபம்/(நஷ்டம்)	85.72	-48.91	26.62	0.71
வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	127.54	-72.24	30.51	0.96
வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	85.72	-48.91	26.62	0.71
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு சமபங்கின் முகமதிப்பு ரூ. 10/–)	204.67	204.67	204.67	204.67
ரிசர்வுகள் (கடந்த ஆண்டு பேலன்ஷீட்டில் உள்ளபடி மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலான ரிசர்வுகள்)				
ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) அடிப்படை	0.42	-0.24	0.13	0.00
பலமிழந்தது	0.42	-0.24	0.13	0.00
ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) அடிப்படை	0.42	-0.24	0.13	0.00
பலமிழந்தது	0.42	-0.24	0.13	0.00

குறிப்பு:
1) எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கடந்த ஆண்டு/ காலத்திற்கான முடிவுகள் ரீ குரூப்/மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.
2) மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவினரால் மறுவகைப்படுத்தப்பட்டு 14 ஆகஸ்ட் 2024 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன. 30 ஜூன் 2024ல் முடிந்த காலாண்டுக்கான முடிவுகள் தணிக்கையாளர்களின் குறுகிய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
3) கம்பெனி ஒரே ஒரு செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இதனால் ஏஎஸ்-17 பிரிவு அறிக்கையின் கீழ் 'பகுதி அறிக்கை' தேவையில்லை.

குழு உத்தரவுப்படி
சந்திரன் கணேசன்
முழுநேர இயக்குனர்
DIN: 08166461

இடம் : சென்னை
தேதி: 14.08.2024

ENROLMENT NOTICE

After ten days of this publication of this notice and within three months thereafter, I **Balu A.V., S/o A.Velan, aged 40 years permanently residing at 13/2, 3rd North Street, Kennedy Square, Sembiam, Chennai 600 011. Tamil Nadu**, intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Pudhcherry, Bar Council Building, High Court Campus, Chennai-600104.
Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.

Balu A.V.

COURT OF THE COMMERCIAL COURT EGMORE AT CHENNAI
C.O.S.NO, 106 of 2024

STATE BANK OF INDIA
(SARC)
Small and Medium Enterprises Centre,
No.157, Anna Salai, 5th Floor, Chennai - 600 002.
Rep. by its Manager ...Plaintiff
Vs.
Mr. C. Santhakumar,
S/o. Chandiran,
No.10/87, 20th Cross Stret,
Parameswaran Nagar, TP Chathram, Shenoy Nagar,
Chennai 600 030.
...Defendant

You are hereby summoned to appear in the court in person or by pleader duly instructed and able to answer all material questions relating to the commercial original suit or who shall be accompanied by some person able to answer all such question on the 20.08.2024 at 10.30 a.m. In the forenon to answer the claim and as the day fixed for your appearance. Take notice mentioned the suit will be heard or determined in your Absence.

M.Suresh
COUNSEL FOR PLAINTIFF

COURT OF THE COMMERCIAL COURT EGMORE AT CHENNAI
C.O.S.NO 93 of 2024

STATE BANK OF INDIA
(SARC)
Small and Medium Enterprises Centre, No.157, Anna Salai, 5th Floor, Chennai - 600 002.
Rep. by its Manager
...Plaintiff
Vs.
M/s. S.K. Enterprises,
Rep. by Prop. S. Purendiran,
S/o. Sundaramoorthy,
New No.23, Old No.11,
Lala Kutty Stret, (First Floor)
Periamet, Chennai - 600 003.
...Defendant

You are hereby summoned to appear in the court in person or by pleader duly instructed and able to answer all material questions relating to the commercial original suit or who shall be accompanied by some person able to answer all such question on the 28.8.2024 at 10.30 A.M. In the forenoon to answer the claim and as the day fixed for your appearance. Take notice that in default of your appearance on the day before mentioned the suit will be heard or determined in your Absence.

M.Suresh
COUNSEL FOR PLAINTIFF

மீனாட்சி இந்தியா லிமிடெட்

CIN : L74300TN1987PLC014678

பதிவு அலுவலகம்: 29/16, வொயிட்ஸ் ரோடு, 4-வது மாடி, ராயப்பேட்டை, சென்னை - 600014

பகுதி 1 **Phone: 044-42636795, EMAIL ID: ho.accounts@milgroup.in, www.milgroup.in**

30.06.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டிற்கான தனித்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூபாய் இலட்சங்களில், ஒரு பங்கிற்கான தரவு தவிர)

வரிசை எண்.	விவரங்கள்	காலாண்டு முடிவில் 30.06.2024 தணிக்கைக்குட்படுத்தப்படாதது	காலாண்டு முடிவில் 30.06.2023 தணிக்கைக்குட்படுத்தப்படாதது	காலாண்டு முடிவில் 31.03.2024 குறிப்பு 5ஐப் பார்க்கவும்	வருட முடிவில் 31.03.2024 தணிக்கை செய்யப்பட்டது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	3,415	3,106	6,743	16,363
2	குறிப்பிட்ட காலத்தில் வரிக்கு முந்தைய நிகர லாபம் (விதிவிலக்கான மற்றும் அசாதாரண ஐட்டங்களுக்கு முன்பு)	626	518	975	2,434
3	குறிப்பிட்ட காலத்தில் வரிக்கு முந்தைய நிகர லாபம் (விதிவிலக்கான மற்றும் அசாதாரண ஐட்டங்களுக்கு பின்பு)	626	518	975	2,434
4	குறிப்பிட்ட காலத்தில் வரிக்கு பிந்தைய நிகர லாபம் (விதிவிலக்கான மற்றும் அசாதாரண ஐட்டங்களுக்கு பின்பு)	465	387	680	1,784
5	குறிப்பிட்ட காலத்திற்கான ஒட்டுமொத்த வருமானம் (அக்காலத்திற்கான (வரிக்கு பின்) இலாபம் மற்றும் இதர ஒட்டுமொத்த வருமானம் (வரிக்கு பின்))	0	1	(8)	1
6	ஈக்விட்டி பங்கு மூலதனம்	375	375	375	375
7	இதர ஈக்விட்டி மறுமதிப்பீட்டு ரிசர்வ் நீங்கலாக	-	-	-	7,658
8	ஒவ்வொன்றும் ரூ. 10 மதிப்பில் ஒரு பங்கு மூலதனம் (EPS)				
	(அடிப்படை மற்றும் குறைந்தபட்ச (EPS) (ரூபாயில்)	12.39	10.33	18.13	47.58

1. நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 133-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப ("Ind As") 34 "இடைக்கால நிதி அறிக்கை -க்கு ஏற்ப மேற்கூறிய தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன மற்றும் SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள் 2015-ன் (திருத்தப்பட்டது) விதி 33-ன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு ஆகஸ்ட் 14. 2024 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. Ind As 108-ன் படி 'பிரிவு அறிக்கையில்' குழு பின்வரும் பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளது. a) ஜவுளி b) இரும்பு உற்பத்தி c) மற்றவைகள்
3. நடப்பு கால ஒப்பீடு நோக்கிற்காக தேவையான இடங்களில் முந்தைய கால / ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன
4. நிதி முடிவுகள் நிறுவனத்தின் இணையதளம் www.milgroup.in ல் கிடைக்கின்றன
5. மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த காலாண்டின் புள்ளி விவரங்கள், முழு நிதியாண்டு தொடர்பான தணிக்கை செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் தொடர்புடைய நிதியாண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதி வரை வெளியிடப்பட்ட ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளி விவரங்களுக்கு இடையிலான சமநிலை புள்ளி விவரங்கள் ஆகும்.

மீனாட்சி இந்தியா லிமிடெட்-காக
(ஒ-ம்)
அஷுதோஸ் கோயங்கா, நிர்வாக இயக்குனர்
DIN: 00181026

இடம்: சென்னை
தேதி: 14.08.2024

எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெட்

S&S POWER

(CIN:L31200TN1975PLC006966)

பதிவு அலுவலகம் : மனை எண். 14, சிஎம்டிஏ இன்டஸ்டிரியல் ஏரியா பகுதி II, சித்தமனூர் கிராமம், மறைமலைநகர் - 603 209, காஞ்சிபுரம் மாவட்டம், இணையதளம் : www.sspower.com

30-06-2024 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு

ரூபாய் லட்சங்களில்

வ. எண்	விவரங்கள்	தனிப்பட்டது				தொகுக்கப்பட்டது			
		முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
		30.06.2024	31.03.2024	30.06.2023	31.03.2024	30.06.2024	31.03.2024	30.06.2023	31.03.2024
		த.ஆகாதது	த.ஆனது	த.ஆகாதது	த.ஆனது	த.ஆகாதது	த.ஆனது	த.ஆகாதது	த.ஆனது
1	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	118.85	49.07	37.27	160.53	3645.16	4,322.54	3,628.02	16,057.12
2	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முந்தைய மற்றும் விலக்கு பெற்ற ரகங்கள்)	(12.46)	(65.82)	(66.25)	(263.41)	(222.57)	90.63	(43.34)	419.44
3	சிறப்பு ரகங்கள்	-	-	-	-	-	-	-	-
4	வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்களுக்கு பிந்தையது)	(12.46)	(65.82)	(66.25)	(263.41)	(222.67)	90.63	(43.34)	419.44
5	வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்களுக்கு பிந்தையது)	(12.46)	(59.00)	(65.34)	(255.38)	(218.50)	97.42	(43.03)	431.80
6	நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வாருவாய் (வரிக்கு பிந்தையது)	3.62	11.29	2.59	14.46	(0.65)	(180.77)	34.06	(105.46)
7	சமபங்கு மூலதனம்	1,234.14	620.00	620.00	620.00	1,234.14	620.00	620.00	620.00
8	முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஸ் சீட்படி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வ் நீங்கலானது).	-	-	-	-	6263.95	(1,161.19)	(1,442.99)	(1,161.19)
9	பங்கு ஒன்றின் வருவாய் (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது) a) அடிப்படை	(0.10)	(0.95)	(1.05)	(4.12)	(1.77)	1.57	(0.69)	6.96
	b) திட்டம்	(0.10)	(0.95)	(1.05)	(4.12)	(1.77)	1.57	(0.69)	6.96

குறிப்புகள்: 1. மேற்குறிப்பிடப்பட்ட தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட நிதி நிலை முடிவுகள் 14-08-2024 அன்று தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 14-08-2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.
2. இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகள் ("Ind AS"). பொருந்தக்கூடிய கம்பெனிகள் சட்டம் 2013-ன் விதிகள் ("கம்பெனிகளின் சட்டம்") மற்றும் செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா ("SEBI") யினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. சட்டப்பிரிவு 133 மற்றும் கம்பெனிகள் (இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகள்) விதிகள் 2015-ன் விதி 3 மற்றும் கம்பெனிகள் (இந்திய கணக்கில் நெறியீட்டு முறைகள்) திருத்தப்பட்ட விதிகள் 2016-ன் கீழ் "Ind AS" பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
3. கம்பெனியானது பவர் பரிமாற்றம் மற்றும் வினிநோகத்திற்கான மின் உபகரணம் உற்பத்தி என்கிற ஒரு தொகுப்பை மட்டும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. Ind AS 108-ல் வழங்கப்பட்டுள்ளபடி புவியியல் பிரிவுகள் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. வரிசை எண். 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி காலாண்டுக்கான துணை ஒருங்கிணைப்பை தவிர தற்போதைய காலகட்டத்துடன் ஒப்பிடும் வகையில் முந்தைய காலாண்டு / ஆண்டு புள்ளிவிவரங்கள் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன / மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.
5. எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெட் நிறுவனம் ஊக்குவிப்பாளர்களுக்கு முன்னுரிமை ஒதுக்கீடாக ரூ.46 கோடி மூலதனத்தை உயர்த்தியுள்ளது. இந்த நிறுவனம் அக்ரோ ஸ்டைல் பவர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தை முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமாக மாற்றிக்கொள்ள அதன் சிறுபான்மைப் பங்குகள் 33.14 சதவீகிதத்தை வாங்கியது. இது நம்முடைய UK செயல்பாடுகளின் முழு விற்பனையையும் ஒருங்கிணைக்க உதவுகிறது. கூடுதலாக, எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெட் நிறுவனமாது ஹாமில்டன் ரிசர்ச் மற்றும் டெக்னாலஜி (HART) நிறுவனத்தின் 100 சதவீகித பங்குகளை வாங்கியது. இது கொல்கத்தாவை தளமாகக் கொண்டு கட்டிங் விளிம்பில் ஒரு சிறப்பு மற்றும் தனியுரிமை உடைய ஆட்டோமேஷன் தொழில் நுட்ப நிறுவனமாகவும் மற்றும் அலுமினியத் துறையில் சிறப்பு கவனம் செலுத்துகிறது. 01-06-2024 முதல் ஹாமில்டன் ரிசர்ச் & டெக்னாலஜி நம் நிறுவனத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டது. ஹாமில்டன் ரிசர்ச் & டெக்னாலஜி-ன் ஜூன் மாத முடிவுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன மற்றும் முந்தைய ஆண்டுகளின் எண்ணிக்கைகள் ஒப்பிடப்படவில்லை. மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து பரிவர்த்தனைகளும் 29-05-2024 அன்று 6,141,550 பங்குகளை ஒதுக்க வழிவகுத்தது. மற்றும் இதன் மூலம் ஊக்குவிப்பாளர்களின் பங்கு 74.97 சதவீகிதமாக அதிகரித்துள்ளது. இந்த பரிவர்த்தனை நிறுவனத்தின் நிகர மதிப்பை ரூ.91 கோடியாக அதிகரித்துள்ளது. நிறுவனத்தின் கடன் மற்றும் வட்டி மொத்தம் 37.75 கோடியை ஜுலை 2024-ல் திருப்பி செலுத்த நிறுவனத்திற்கு உதவியது. இது பங்குதாரர்கள், SEBI மற்றும் NAC/BSC ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல்களுக்கு ஏற்ப உள்ளது.
6. 30-06-2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டின் புள்ளிவிவரங்கள் மற்றும் முந்தைய ஆண்டில் முடிந்த தொடர்புடைய காலாண்டின் புள்ளிவிவரங்களும் இந்த முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முழு நிதி ஆண்டு தொடர்பான சமநிலை புள்ளிவிவரங்கள் மற்றும் முதல் காலாண்டின் இறுதிவரை வெளியிடப்பட்ட ஆண்டின் முதல் தேதி வரையிலான புள்ளி விவரங்கள் நிதி ஆண்டின் தொடர்புடையது. மேலும் முதல் காலாண்டின் இறுதி வரையிலான புள்ளிவிவரங்கள் மட்டுமே மதிப்பாய்வு செய்யப்பட்டன மற்றும் தணிக்கைக்கு உட்பட்டது அல்ல.

எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெடுக்காக
ஒ-ம்/-
கிருஷ்ணகுமார் ராமநாதன்
நிர்வாக இயக்குனர் (DIN 08880943)

நாள் : 14-08-2024
இடம் : மும்பை

GEM SPINNERS INDIA LTD

Regd. Office: 14, Mangalam Village, Madhuranthangam Taluk, Kancheepuram District - 603 107
Corporate Office: 78, Cathedral Road, Chennai - 600086
CIN: L17111TN1990PLC019791 E-mail ID: secretarial@gemspin.com

(Rs. in lakhs)

STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE FIRST QUARTER ENDED 30.06.2023 (UNAUDITED)

PARTICULARS	QUARTER ENDED 30.06.2023	QUARTER ENDED 31.03.2023	QUARTER ENDED 30.06.2022	YEAR ENDED 31.03.2023
	Unaudited	Unaudited	Unaudited	Unaudited
Total Income from operations (Net)	0.00	0.00	0.00	0.00
Net Profit / (Loss) from ordinary activities after tax	(12.57)	(13.61)	(16.80)	(64.90)
Net Profit / (Loss) for the period after tax / deferred tax (after Extraordinary items)	(12.57)	(13.61)	(16.80)	(64.90)
Equity Share Capital	3068.60	3068.60	3068.60	3068.60
Reserves (excluding Revaluation Reserve as shown in the Balance Sheet of previous year)	(3180.90)	(3168.31)	(3115.78)	(3098.98)
Earnings Per Share (before extraordinary items) (of Rs.___/- each) (not annualised):				
(a) Basic	(0.02)	(0.02)	(0.03)	(0.03)
(b) Diluted	0.00	0.00	0.00	0.00
Earnings Per Share (after extraordinary items) (of Rs.___/- each) (not annualised):				
(a) Basic	(0.02)	(0.02)	(0.03)	(0.03)
(b) Diluted	0.00	0.00	0.00	0.00

Note: The above is an extract of the detailed format of Quarterly / Annual Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly / Annual Financial Results are available on the Stock Exchange websites (www.bseindia.com)

NOTES:
1. During the quarter there was one complaint received from the investors and resolved.
2. During the quarter there were no trading activities.
3. During the quarter, the Company has provided Depreciation on Plant & Machineries considering the life of the assets.
4. The above results have been reviewed by the Audit Committee and the same were approved and taken on record by the Board of Directors at the meeting held on 14th August, 2024.
5. Previous Quarter's figures have been regrouped / reclassified wherever necessary.

Place: Chennai
Date: 14-08-2024

R. VEERAMANI
MANAGING DIRECTOR